# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 02 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (திருத்தச்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 11/2008*

***1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தைத் திருத்துவற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, சட்டத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(அ) அதன் (ஐ) என்னும் பந்தியில் "செய்தல்." என்னும் சொல்லுக்குப் பதிலாக "செய்தல்;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்*

*(ஆ) அதன் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*"(ஒ) அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் தேவைப் படுத்தப்பட்ட பதிவை பெற்றுக்கொள்ளாது வெளிநாடு செல்கின்றார் என நம்புவதற்கு அலுவலர்களுக்கு காரணமிருக்கின்றவிடத்து, இச்சட்டத்திற்கு இணங்கியொழுக பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனைச் சரிபார்க்கும் நோக்கத்திற்காக, தொழிலுக்காக*

2-PL 004360 -1,190 (2009/09)

வெளிநாடு செல்லும் ஆளொருவரின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை ஏதேனும் துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் பரிசோதிப்பதற்கு, பணியகத்தின் அலுவலர்களுக்கு அதிகாரமளித்தல் ; அத்துடன்

(ஓ) இலங்கைத் தொழிலாளர்களின் நலனிற்காக வெளிநாட்டுத் தொழில்தருநர்களிடமிருந்து சமூக பாதுகாப்பு அறவீடுகளைப் பெற்றுக் கொள்ளல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) விண்ணப்பதாரர் உரிமமொன்றிற்காக விண்ணப்பிக்கின்ற நேரத்தில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை ஏற்கனவே வைத்திருப்பாராயின், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 37அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"அங்கீகாரமின்றி விளம்பரம் முதலான வற்றை வெளியிடுவதன் மீதான மட்டுப்பாடு.*

37அ. (1) ஆளெவரும், இலங்கைக்கு வெளியே வேலைசெய்வதற்காக ஆட்களிடையேயிருந்து விண்ணப்பங்களைக் கோரி உரிமம்பெற்ற ஒருவரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் ஏதேனும் ஊடகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விளம்பரத்தை அல்லது அறிவித்தலை 37 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய வெளியீட்டிற்கு அத்தகைய

விளம்பரம் அல்லது அறிவித்தல் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென தம்மைத் திருப்தி செய்யாமல் அத்தகைய விளம்பரத்தை அல்லது அறிவித்தலை அச்சிடுதல் அல்லது வெளியிடுதல் அல்லது அச்சிடவோ அல்லது வெளியிடவோ செய்வித்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆட்சேர்க்கப்பட்டவரான" என்னும் சொல்லுக்குப் பதிலாக "விட்டுச் செல்கின்றவரான" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆட்சேர்க்கப்பட்டவரான" என்னும் சொல்லிற்குப் பதிலாக "விட்டுச் செல்கின்றவரான" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"தரகு மற்றும் வேறு கொடுப்பனவுகளை அறவீடு செய்தல்.*

51அ. (1) எவரேனும் உரிமம்பெற்றவர் இலங்கைக்கு வெளியேயான தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஏதேனும் தரகு அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவை பெறாதிருப்பின், பணியகத்திடமிருந்து அதற்கான முன்அங்கீகாரம் பெறப்பட்டதன் பின் எவரேனும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரிடமிருந்து பதிவுக்கட்டணத்திற்கு மேலதிகமாக, உறப்படும் உண்மையான செலவினத்தை அறவீடு செய்யலாம். வேண்டப்பட்ட செலவினங்கள் நியாயமற்றவையென பணியகம், நம்புகின்றவிடத்து, 37 ஆம் பிரிவின்கீழ் அங்கீகாரம் வழங்குவதனைப் பணியகம் மறுக்கலாம்.

(2) வெளிநாட்டுத் தொழில்தருநரிடமிருந்து செலவினங்களுக்கான கொடுப்பனவைப் பெற்றுள்ள உரிமம்பெற்றவரொருவர் அத்தகைய கொடுப்பனவு பெற்றதை மறைத்துள்ளவிடத்தும் மற்றும் அந்த செலவினங்களுக்கான கொடுப்பனவிற்கென வேண்டுகோள் விடுக்கின்றவிடத்தும், அத்தகைய உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(3) உரிமம்பெற்றவரொருவர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவொன்றைப் பெறுகின்றவிடத்து, உரிமம்பெற்றவர் அவ்வாறு பெறப்பட்ட தொகைக்கான பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நியதிகளின்படி பற்றுச்சீட்டொன்றை வழங்காதுவிடுகின்ற உரிமம்பெற்றவரொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(5) உரிமம்பெற்றவரொருவரால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டில் தரகாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தொகை நியாயமற்றதெனவும் மற்றும் தரகு என்றவாறு பெறப்பட்டிருக்கவேண்டியதான அத்தகைய தொகைக்கு கீழான தொகை எனவும் பணியகம் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, (4) ஆம் உட்பிரிவின் கீழான மதிப்பிடுதல் நோக்கத்திற்காக தரகுத் தொகையானது, தொழிலின் தன்மை மற்றும் முகவர்களால் பெறப்படக்கூடிய நன்மைகளின் அளவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு அமைச்சரால் விதித்துரைக்கப்படக் கூடியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) உரிமம்பெற்றவரொருவர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்வையின் கொடுப்பனவில் தவணை தவறுகின்ற விடத்து அல்லது தரகாகப் பெற்றுக்கொள்ளப்பட் டிருக்கவேண்டிய தொகையை விட தரகுத்தொகை குறைவானதாகவுள்ளவிடத்து தீர்வை தொடர்பாக (4) ஆம் உட்பிரிவின்கீழ் பணியகத்தால் உரிமம்பெற்றவ ரொருவர் தொடர்பாக மதிப்படுதலொன்று செய்யப்படு கின்றவிடத்து, உரிமம்பெற்றவர் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரினாலான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும். மேலும், நீதிவான் தவணைதவறுகை யிலுள்ள தீர்வைத் தொகையை செலுத்துமாறும் உரிமம்பெற்றவருக்குக் கட்ளையிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும் கழகத்தின் உறுப்பினர் ஒருவராக வருதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "உரிமம் பெற்றவரொருவர் கழகத்தின் உறுப்பினர் ஒருவராக வரலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) (ஆ) என்னும் உட்பிரிவில் "பதிவேடுகள் எவற்றையும் பரிசோதிக்கலாம் அத்துடன் அவற்றின் பிரதிகளை எடுக்கலாம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதிவேடுகள் எவற்றையும் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பிலான ஆவணங்கள் எவற்றையும் பரிசோதிக்கலாம் அத்துடன் அவற்றை எடுக்கலாம்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 60ஆ, 60இ மற்றும் 60ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 60ஆ, 60இ மற்றும் 60ஈ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும் :-

"பணியகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போர் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நோக்கங்களுக் காகப் பகிரங்க அலுவலர்களாக கருதப்படுதல்.

60ஆ. பணியகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்படவும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காக வும் –

(அ) பகிரங்க அலுவலரொருவராகவும் ; அத்துடன்

(ஆ) சமாதான அலுவலரொருவராகவும்,

கருதப்படுதல் வேண்டும்.

பணியகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்கள் என்போர் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக் காகப் பகிரங்க அலுவலர்களாக கருதப்படுதல்.

60இ. பணியகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவரும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலரொரு வராகக் கருதப்படுதல் வேண்டும்.

துடர்ச்சியி லிருந்தான விடுபாட்டுரிமை.

60ஈ. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் பணியகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப் பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்காகப் பணியகத்திற்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பணியகத்தின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் சட்டமுறையான செயலுக்ாகப் பணியகத்தின் எவரேனும் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவருக்கு எதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பணியகத்தால் அல்லது பணியகத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பணியகத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்கள் பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பணியகத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது பணியகத்தால் மீளப்பெறப்பட்ட ஏதேனும் செலவு பணியகத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''ஆயிரம் ரூபாவுக்குக்'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் நான்கு ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இருபதினாயிரத்திற்குக்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவு வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும் நான்கு ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவு "ஆயிரம் ரூபாவுக்குக்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தைந்தாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றுக்கும், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதது மான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவு "ஆயிரம் ரூபாவுக்குக்" என்பதிலிருந்து ஆளாதலும் வேண்டும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத துமான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆம் பிரிவு "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவு "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவு "ஆயிரம் ரூபாவுக்குக்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கும் மற்றும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தையாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படு கின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 67ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"தவறொன்றிற்கு உதவி செய்தலும் உடந்தையாய் இருத்தலும் தவறொன்றாதல்.

67ஆ. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதில் உரிமம்பெற்ற ஒருவருக்கு அல்லது அவரது ஊழியருக்கு உதவிசெய்யும் அல்லது உடந்தையாக இருக்கும் எவரேனும் ஆள் தவறொன் றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரிலான சுருக்கமுறை விசாரணை யின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாத இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக் கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 69அ மற்றும் 69ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 69அ மற்றும் 69ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*“கைது செய்வதற்கான தத்துவங்கள்.*

69அ. 37அ, 62 ஆம், 63 ஆம் அல்லது 64 ஆம் பிரிவுகளின்கீழ் தவறொன்றை எவரேனும் ஆள் புரிகின்றவிடத்து அல்லது ஏதேனும் அத்தகைய தவறை புரிந்தமைக்கு அவர் குற்றவாளியாக உள்ளார் என்பதற்கு நியாயமான சந்தேகம் எவ்வாளுக்கு எதிராக உள்ளதோ அத்தகைய ஆள், நிலம் அல்லது நீர் மீதான ஏதேனும் இடத்தினுள் பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது அதுசார்பாக பணியகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட பணியகத்தின் ஊழியரொருவரினால் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படலாம். அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் -

(i) சட்டத்திற்கிணங்கக் கையாளப்படுவதற்கென நீதிவானொருவர் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும் ; அல்லது

(ii) அவ்வாறு செய்வது சாத்தியமற்றவிடத்து சட்டத்திற்கிணங்கக் கையாளப்படுவதற்கென மிக அண்மையிலுள்ள பொலிசுநிலையப் பொறுப்பு அதிகாரியிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

*குற்றப்பணங்களின் குறித்த பாகம் பணியகத்தின் வேலையாட்கள் நலன்புரி நிதியத்திற்கு அனுப்பப்படல்.*

69ஆ. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் எவரேனும் ஆள் தவறொன்றிற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் குற்றப்பணமொன்று விதிக்கப்பட்டுள்ளவிடத்தும் அவ்வாறு விதிக்கப்பட்டு அறவிடப்பட்ட ஏதேனும்

குற்றப்பணத்தின் எழுபத்தைந்து சதவீதம் இச்சட்டத்தின் 45 ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட பணியகத்தின் வேலையாட்கள் நலன்புரி நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் தவறு தொடர்பிலான சுருக்க விசாரணையை கேட்ட நீதிவான் தண்டனைத் தீர்ப்பிற்கு மேலதிகமாக, விதிக்கப்பட்டு அறவிடப்பட்ட குற்றப்பணத்தின் எழுபத்தைந்து சதவீதத்தை பணியகத்தின் வேலையாட்கள் நலன்புரி நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

**20.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்